

உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் வத்தளையை வதிவிடமாகவும் கொண்டு கனடாவில் வசித்துவந்தவருமான

## திருமதி நவமணி பொன்னுத்துரை

அவர்களின்

# நினைவுமலர்

## 06.02.2005

## சமர்ப்பணம்

அணையா விளக்காய் ஒளிவீசி
அன்புவழியி லெமைவளர்த் தெடுத்து
இதமாய்ப் பண்பாய் உறவுபேணி
நிதமும் பொறுமையாய்ப் பணிபுரிந்து
பாரிலெம்மை உயர்வாய் வாழவைத்த
பாசமலர் அன்னையின் பதம்பணிந்து
நினைவஞ்சலி மலரிதனைச் சமர்ப்பித்து
நினைந்து நினைந்தே வணங்குகின்றோம்.

இங்ஙனம்
குடும்பத்தினர்





வையத்துள் அறிமுகம் 24.05.1920

தெய்வத்துள் சங்கமம் 07.01.2005

## அமரர்

## திருமதி நவமணி பொன்னுத்துரை

திதி வெண்பா

சீரோங்கு தாரண ஆண்டுசேர் மார்கழியில்
பாரோங்கப் பக்திசேர் அபர துவாதசியில்
சார்ந்த வினையகல அல்லலில் நவமணி
சேர்ந்தாள் இறைவன் தாள்

# பஞ்சபுராணம்

**திருச்சிற்றம்பலம்**

தேவாரம் ஓதுவதற்கு முன் 'திருச்சிற்றம்பலம்' என்று சொல்லி விட்டுத் தொடங்குவது மரபு. காரணம் இந்த சிதம்பர புண்ணியதலம் தான் சைவத் திருமுறைகளைப் பாதுகாத்து உபசரித்து. இது இசை உலகிற்கே பிறப்பிடம் அதனால் தான் திருமுறை ஓதுபவர்கள் ஆரம்பத்திலும் , முடிவிலும் திருச்சிற்றம்பலம் என்று சொல்வார்கள்.

**தேவாரம்**

தேவாரம் என்பதன் கருத்து (தே - ஆரம்) தெய்வத்திற்குச் சூட்டப்படும் பாமாலை என்றும் (தே - வாரம்) தெய்வத்தின் மீது அன்புடன் பாடப்படும் இன்னிசைப் பாடல் என்றும் பொருள் கூறப்படும். சமயகுரவர் நால்வரில் மூவரான திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி நாயனார் ஆகியோர் பாடியதே தேவாரம் எனப்படும். இதனை அடங்கன் முறை எனக் கூறுவர். இவர்கள் மூவருமே சிவபெருமானை நினைத்துப் பாடியுள்ளனர். இதனால் தேவாரம் சிவபெருமானின் மீது அன்புடன் பாடப்படும். இன்னிசைப் பாடலாகும்.

**திருவாசகம்**

"திருவாசகத்திற்கு உருகாதோர் ஒரு வாசகத்திற்கும் உருகார்" என்பது முதுமொழி. சமய குரவர் நால்வரில் ஒருவராகிய மாணிக்கவாசகர் பாடிய நூல் திருவாசகம் நெஞ்சை உருக்கும் திருவாசகம் மாணிக்கவாசகர் சொல்ல சொல்ல இறைவனால் எழுதப் பெற்ற சிறப்பினையுடையது. திருவாசகம் என்பது திருமயமான வாசகம் எனப் பொருள்படும். ஈண்டுத் திருவென்பது அருட்திரு. எனவே அருள்நாத வடிவான வாசகம் என்றவாறு ஆயிற்று. திருவாசகம் 8ம் திருமுறையாகப் பேசப்படுகின்றது. திருவாசகமும் திருக்கோவையாரும் இறைவன் விரும்பிக் கேட்டுத்தன் திருக்கரங்களால் எழுதப்பெற்றவை. திருவாசகத்தில் 51 பகுதிகளும் 656 பாடல்களும் திருக்கோவையாரில் 400 பாடல்களும் அமைந்துள்ளன.

### திருவிசைப்பா

திருவிசைப்பா என்பது தெய்வத்தன்மையுள்ள இறைவன் புகழைக் கூறும் பாடல் எனவும் தெய்வத்தன்மைமிக்க இசை பண்புள்ள பாடல் எனவும், இறைவனின் பொருள்சேர் புகழை வியந்து பாடிய பாடல் எனவும் பொருள்படும். பெருமானின் பொருள் சேர் புகழை நினைந்துருகிப் பாடிய திருவிசைப்பாக்கள் ஓதுவாருள்ளத்தை உருக்கி இறையன்பில் ஈடுபடச் செய்யும் இயல்பு படைத்தவை. திருமாளிகைத் தேவர் முதலாக சேதிராயர் ஈறாக 9 ஆசிரியர்கள் பாடிய பாடல்கள் அமைந்துள்ளன. திருவிசைப்பாப் பாடல்கள் 303ம் சேந்தனார் பாடிய திருப்பல்லாண்டு 13 பாடல்களும் கொண்டு விளங்குகிறது.

### திருப்பல்லாண்டு

திருப்பல்லாண்டு என்பது இறைவனின் அருட்செயல்களை எல்லாம் எடுத்தியம்பி அவனை பல்லாண்டு கூறி வாழ்த்துவதாகும். வானவரும் இறைவனைப் பல்லாண்டு கூறி வாழ்த்துவது தாம் இன்பமாக வாழும் பொருட்டேயாகும். மக்களாகிய நாம் பிறவித்துயர் நீங்கிப் பேரின்பவாழ்வு பெறுதற் பொருட்டே இறைவனைப் பல்லாண்டு கூறி வாழ்த்துகின்றோம். (சேந்தனார் ஓடாத தேரை ஓடச் செய்தது திருபல்லாண்டு பாடி)

### திருப்புராணம்

திருப்புராணம் என்னும் பெயருடன் 12ம் திருமுறையில் பெரிய புராணமே இடம் பெற்றுள்ளது. இதில் 63 நாயன்மார் வரலாறும் விரித்துக் கூறப்படுகின்றது. இதைப் பாடியருளியவர் சேக்கிழார் சுவாமிகள் ஆவர். இதில் 2 காண்டங்களும் 13 சருக்கங்களும் 4253 பாடல்களும் காணப்படுகின்றன. (தேவாரப் பண்கள் இராப்பண் - பகற்பண் அதற்குரிய இராகங்கள் என்பனவற்றையும் குறிப்பது பயனுடையது.)







### விநாயகர் துதி

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தனைப்
புந்தியில் வைத்தடி போற்று கின்றேனே

### தேவாரம்

முன்னமவனுடைய நாமங் கேட்டாள்
மூர்த்தி அவனிருக்கும் வண்ணங் கேட்டாள்
பின்னை அவனுடைய ஆரூர் கேட்டாள்
பெயர்த்து மவனுக்கே பிச்சியானாள்
அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்
அகன்றாள் அகலிடத்தார் ஆசாரத்தை
தன்மை மறந்தாள் தன்னாமங் கெட்டாள்
தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே.

கூற்றாயின வாறு விலக்ககிலீர்
கொடுமை பலசெய்தன நானறியேன்
ஏற்றாயடிக்கே இரவும் பகலும்
பிரியாது வணங்குவன் எப்பொழுதும்
தோற்றாதென் வயிற்றின் அகம்படியே
குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேன் அடியேன்அதி கைக்கெடில
வீரட்டானத் துறை அம்மானே.

## திருவாசகம்

பாரொடு விண்ணாய்ப் பரந்த எம்பரனே
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
ஆரொடு நோகேன் ஆர்க்கெடுத் துரைக்கேன்
ஆண்ட நீ அருளிலை யானால்
வார்கடல் உலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருகவென் றருள்புரி யாயே.

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே யாய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெரு மானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே



## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப்
பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னியதில் லைதன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற சிற்றம்
பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல் லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

ஐந்துபே ரறிவுங் கண்களே கொள்ள
அளப்பருங் கரணங்க ணான்குஞ்
சிந்தையே யாகக் குணமொரு மூன்றுந்
திருந்துசாத் துவிகமே யாக
இந்துவாழ் சடையா னாடுமா னந்த
வெல்லையில் தனிப்பெருங் கூத்தின்
வந்தபே ரின்ப வெள்ளத்துட் டிளைத்து
மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார்

## திருப்புகழ்

பக்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனா மாறெனைப் பெருவாழ்வின்
முத்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தமா தானசற் குணர்நேயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசத் தினிபாதா
வெற்றிவே லாயுதப் பெருமானே

## திருவாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

உ
சிவமயம்



## திருவாசகச் சிறப்பு

### வெண்பா

தொல்லை யிரும்பிறவிச் சூழும் தளைநீக்கி
யல்லலறுத் தானந்த மாக்கியதே - எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூ ரெங்கோன்
திருவா சகமென்னுந் தேன்.

# சிவபுராணம்

## திருப்பெருந்துறையில் அருளியது

**திருச்சிற்றம்பலம்**

நமச்சிவாய வாழ்க நாதன் தாள் வாழ்க
இமைப்பொழுது மென்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி ஆண்ட குருமனிதன் தாள்வாழ்க
ஆகம மாகிநின்(று) அண்ணிப்பான் தாள்வாழ்க
ஏகன் அநேகன் இறைவன் அடி வாழ்க
வேகம் கெடுத்(து) ஆண்ட வேந்தனடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவார் உள்மகிழும் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல்வெல்க
ஈசனடி போற்றி எந்தைஅடி போற்றி
தேசனடி போற்றி சிவன்சேவடி போற்றி
நேயத்தே நின்ற நிமலன்அடி போற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னன்அடி போற்றி
சீரார் பெருந்துறைநம் தேவன் அடிபோற்றி
ஆராத இன்பம் அருளு மலைபோற்றி
சிவன் அவன்என் சிந்தையுள் நின்ற அதனால்
அவனரு ளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுரா ணந்தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன்யான்
கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி



எண்ணுதற்(கு) எட்டா எழில்ஆர் கழல் இறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய்விளங்(கு) ஒளியாய்
எண்இறந்(து) எல்லை இலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமாறு ஒன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரம் ஆகிப்
பல்விருகம் ஆகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்அசுரர் ஆகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள்
எல்லாப்பிறப்பும் பிறந்(து) இளைத்தேன் எம்பெருமான்
மெய்யேயுன் பொன்னடிகள் கண்(டு)இன்று வீடுற்றேன்
உய்யஎன் உள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனஓங்கி ஆழ்ந்(து)அகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமான னாம்விமலா
பொய்யா யினஎல்லாம் போய்அகல வந்தருளி
மெஞ்ஞானம் ஆகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானந் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம் அள(வு)இறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனம்கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற்போலச்
சிறந்(து) அடியார் சிந்தனையுள் தேன்ஊறி நின்று
பிறந்த பிறப்(பு) அறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்கள் ஓர்ஐந்(து) உடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் றன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றால் கட்டிப்
புறந்தோல்போர்த்(து) எங்கும் புழுஅழுக்கு மூடி
மலம்சோரு மொன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்தஅன் பாகிக் கசிந்(து)உள் உருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி

நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயவான தத்துவனே
மா(சு)அற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேன்ஆர் அமுதே சிவபுரனே
பாசமாம்பற்(று) அறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில்வஞ் சம்கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கிஎன் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக்(கு) அன்பனே யாவையுமாய் அல்லையுமாம்
சோதியனே துன்இருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்(து) என்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்த மெய்ஞ்ஞானத்தால் கொண்டுணர்வார் தம்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்ககரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்கும் எம் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்(று)இன்ப வெள்ளமே அத்தா மிக்காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேஎன் சிந்தனையுள்
ஊற்றான உண்ணார் அமுதே உடையானே
வேற்று விகார விடக்(கு)உடம்பின் உள்கிடப்ப
ஆற்றேன் எம்ஐயா அரனேயோ என்றென்று
போற்றிப் புகழ்ந்(து)இருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்(டு)இங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்(டு)அழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்(று)ஆடும் நாதனே
தில்லையுள் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லல் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற்(கு) அரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருள்உணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து

*திருச்சிற்றம்பலம்*



## பட்டினத்தார் பாடல்

ஐயிரண்டு திங்களாய் அங்கமெலாம் நொந்து பெற்றுப்
பையலென்ற போதே பரிந்தெடுத்துச் - செய்யவிரு
கைப்புறத்தி லேந்திக் கனகமுலை தந்தாளை
எப்பிறப்பிற் காண்பேன் இனி?
முந்தித் தவங்கிடந்து முந்நூறு நாளளவும்
அந்திபகலாய்ச் சிவனை ஆதரித்து - தொந்தி
சரியச் சுமந்து பெற்ற தாயார் தமக்கோ
எரியத் தழல்மூட்டு வேன்?
வட்டிலிலுந் தொட்டிலிலும் மார்மேலுந் தோள்மேலுங்
கட்டிலிலும் வைத்தென்னைக் காதலித்து - முட்டச்
சிறகிலிட்டுக் காப்பாற்றிச் சீராட்டுந் தாய்க்கோ
விறகிலிட்டுத் தீமூட்டு வேன்?
நொந்து சுமந்து பெற்று நோவாம லேந்திமுலை
தந்து வளர்த்தெடுத்துத் தாரைமேல் - அந்திபகல்
கையிலே கொண்டென்னைக் காப்பாற்றுந் தாய்தனக்கோ
மெய்யிலே தீமூட்டு வேன்?
அரிசியோ நானிடுவேன் ஆத்தாள் தனக்கு
வரிசையிட்டுப் பார்த்து மகிழாமல் - உரிசியுள்ள
தேனே அமிர்தமே! செல்வத் திரவியப்பூ
மானே எனவழைத்த வாய்க்கு




## பிள்ளையார் சிந்தனை

சிந்தித் தவர்க்கருள் கணபதி ஜெயஜெய
சீரிய ஆனைக் கன்றே ஜெயஜெய
அன்புடை அமரரைக் காப்பாய் ஜெயஜெய
ஆவித் துணையே கணபதி ஜெயஜெய
இண்டைச் சடைமுடி இறைவா ஜெயஜெய
ஈசன் தந்தருள் மகனே ஜெயஜெய
உன்னிய கருமம் முடிப்பாய் ஜெயஜெய
ஊர்நவ சந்தி உகந்தாய் ஜெயஜெய
எம்பெரு மானே இறைவா ஜெயஜெய
ஏழுல குந்தொழ நின்றாய் ஜெயஜெய
ஐயா கணபதி நம்பியே ஜெயஜெய
ஒற்றை மருப்புடை வித்தகா ஜெயஜெய
ஓங்கிய ஆனைக் கன்றே ஜெயஜெய
ஔவிய மில்லா அருளே ஜெயஜெய
அஃகர வத்து ஆனவா ஜெயஜெய
கணபதி என்வினை களைவாய் ஜெயஜெய
ஙப்போர் மழுவொன் றேந்தியே ஜெயஜெய
சங்கரன் மகனே சதுரா ஜெயஜெய
ஞயநம் பினர்பா லாடிய ஜெயஜெய
இடம்படு விக்கின விநாயக ஜெயஜெய
இணங்கிய பிள்ளைகள் தலைவா ஜெயஜெய
தத்துவ மறைதெரி வித்தகா ஜெயஜெய
நன்நெறி விக்கின விநாயகா ஜெயஜெய
பள்ளியி லுறைதரும் பிள்ளாய் ஜெயஜெய
மன்று ளாடும் மணியே ஜெயஜெய
இயங்கிய ஞானக் குன்றே ஜெயஜெய
அரவக் கிண்கிணி ஆர்ப்பாய் ஜெயஜெய
இலவக்கொம்பொன் றேந்தியே ஜெயஜெய
வஞ்சனை பலவுந் தீர்ப்பாய் ஜெயஜெய
அழகிய ஆனைக் கன்றே ஜெயஜெய
இளமத யானை முகத்தாய் ஜெயஜெய
இரகுபதி விக்கின விநாயகா ஜெயஜெய

அனந்தலோ டாதியி லடிதொழ வருளே.
பிள்ளையார் சிந்தனை முற்றிற்று.



## எங்கள் குல தெய்வம்



உரும்பை ஊர்காக்கும் கருணா கரனெம்
குருவாய் தெய்வமாய் உயர்வீடு நல்கி
இருள்கடிந்து அன்னையை ஆட்கொண்டு அருளி
அருள்மழை பொழிவான் எமக்கு

# வாழ்க்கை வரலாறு

யாழ்நகரில் எழில்மிகு உரும்பிராய் பதியில் எழுந்தருளியிருக்கும் கருணாகரப் பெருமானை குலதெய்வமாகக் கொண்ட நல்லதம்பி தம்பிராசாவுக்கும் அவர் துணைவி செல்லமுத்துவுக்கும் சீமந்த புத்திரியாக 1920ம் ஆண்டு வைகாசி மாதம் 24ம் திகதி செல்வமகள் நவமணி இப்பூமியிலே பிறந்தார். குடும்பத்தின் மூத்த மகள் என்ற பெருமையுடன் குடும்பத்தார் உற்றார் உறவினர் மத்தியில் மிகவும் சீரும் சிறப்புமாக வளர்ந்து வந்தார். தந்தையாகிய திரு. தம்பிராசா அவர்கள் நுவரெலியா மாவட்டம் கந்தப்பளை கொங்கோடியா தேயிலைத் தோட்டத்தில் கடமையாற்றியமையால் இவரது இளமைக் காலம் உரும்பிராயிலும் தோட்டப்பகுதியிலுமாகக் கழிந்தது.

இவருக்கு மலர்மணி என்ற சகோதரியும், இராசநாயகம், செல்வநாயகம், குணநாயகம், கனகநாயகம், அரியநாயகம் ஆகிய ஐந்து சகோதரர்களும் இருந்தனர். தங்கை தம்பியருடன் ஆனந்தமாக இவரது பிள்ளைப்பருவம் கழிந்தது. யாதொரு குறையுமின்றி குடும்பத்துடன் செழிப்பாக வாழ்ந்து வந்தார்.

இவரது இளம்பிராயத்திலேயே தந்தையாகிய தம்பிராசாவின் மூத்த அக்காவின் இரண்டாவது மகனாகிய திரு.சின்னத்தம்பி பொன்னுத்துரை (தபாலதிபர்) அவர்களை 1936ம் ஆண்டு திருமணம் செய்து கொண்டார். இவர்களது இல்லற வாழ்க்கை தலவாக்கலை, லிந்துல, ஹட்டன் போன்ற தோட்டப்பகுதிகளிலே பெற்றோர்களின் அண்மையில் இனிதேசென்றது.

திரு.பொன்னுத்துரை அவர்கள் தபாலதிபராக இருந்தமையால் இடமாற்றலின் நிமித்தம் கொழும்பு, சீனன்குடா, மாதம்பை, பளை, சுண்டுக்குளி போன்ற பல இடங்களிலும் இவர்கள் வாழ்ந்தனர். 1958ம் ஆண்டு ஏற்பட்ட இனக்கலவரத்தின் பின்னர் கணவராகிய பொன்னுத்துரை ஓய்வு பெற உரும்பிராயில் நிரந்தரமாக வாழ்ந்தார்கள்.



திருமதி நவமணி பொன்னுத்துரை அவர்களுக்கு நன்மக்கள் எண்மர் இருந்தனர். பாலசுப்பிரமணியம், உமாராணி, ஜெகதீஸ்வரி, யோகநாதன், பத்மலோஜனி, ஜெயலட்சுமி, சிவயோகன், ஞானசேந்தன் ஆகிய எட்டுப் பிள்ளைகளையும் நலமே வளர்த்தனர். பிள்ளைகளைச் சிறப்புற வளர்த்து கல்வி கற்பித்து உயர் நிலைக்குக் கொண்டுவருதலையே தம் தலையாய நோக்காகக் கொண்டனர். 1965ம் ஆண்டு வைகாசி மாதம் 2ம் திகதி கணவன் சிவபதம் அடைய தனிமைத் துயர் தாங்கி பிள்ளைகள் மேன்மையுறப் பாடுபட்டார். பேரப்பிள்ளைகள் வளர்ச்சியிலும் கருத்தாக உழைத்தார். நாட்டு நிலை காரணமாக 1987ல் தாய்மனை முற்றாக அழிக்கப்பட்டமை கண்டு வேதனை அடைந்தார். தொடர்ந்தும் நிலவிய சூழலில் கொழும்பிற்கு வந்து மகளுடன் வாழத்தொடங்கினார். வத்தளையிலும் உரும்பிராய் போன்ற சூழல் நிலவ மக்கள், மருமக்கள்,பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகளுடன் நிறைவாக வாழ்ந்தார். பாசமிக்க பாட்டியாக, பூட்டியாக ஆனந்தமாக வாழ்ந்தார்.

திசைக்கொருவராக உரும்பிராயில், வத்தளையில், அவுஸ்திரேலியாவில், கனடாவில் பிள்ளைகள் வாழ்ந்தபோதும் எல்லோரும் நன்றாக வாழவேண்டும் என்ற வேண்டுதலுடன் அன்பு மிக்க அன்னையாகத் திகழ்ந்தார். ஆசையாய் கனடா வந்து பிள்ளைகள் பேரப்பிள்ளைகளுடன் இன்பமாய் வசித்தார். ஆனால் காலன் அங்கு காத்திருந்ததை ஒருவரும் அறியவில்லை. நெடுங்காலம் பிரிந்திருந்த உறவினருடன் உறவாடிக் களித்தார். பல இடங்களையும் சுற்றிப் பார்த்து இரசித்தார். எல்லோரையும் திகைப்பில் ஆழ்த்தி 2005ம் ஆண்டு தை மாதம் 7ம் திகதி (மார்கழி 24) வெள்ளிக்கிழமை அதிகாலை இருதய நோயால் தாக்குண்டு இறைபதம் எய்தினார். துன்பம் எதுவுமின்றி அவரை இறைவன் அழைத்துக் கொண்டதில் சாந்தி அடைகின்றோம்.

அவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திப்போமாக.

*ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!*

## பாசமிகு பெரியதம்பியின் அஞ்சலி

சகோதர பாசம் விட்டகலாதென்று
சரித்திரங்கள் பல கூறும்
தக்க சோதனைகள் வரும்போதும்
சகோதரத்தை நினைப்போம்
எக்காலத்திலும் சகோதரத்தைப் போல
ஒரு பிறவி கிடைக்குமோ?
பக்க உதவியான சகோதரியைப்
பறிகொடுத்துத் தவிக்கின்றோம் நாம்

உலகில் உண்மை உண்டு
வாடி உதிர்ந்த பூ வையமதில்
மீண்டும் மலர்வதில்லை
ஆளுக்கொரு திகதி அது தான் நியதி
போய் வாருங்கள் அக்கா
மீண்டுமொரு பிறவியில் நாம்
பெரியக்காவே என்றழைக்க
உங்களைத் தாங்கிய ஆன்மா
இறையடி தங்கி சாந்தி அடையட்டும்
ஓம் சாந்தி!

*அன்பு பெரியதம்பி*

**த. இராசநாயகம்**

## உடன் பிறப்பின் உள்ளக் குமுறல்

உடன் பிறவியை விட்டு கண்ணுக்கு எட்டாமல் போன அக்காவே, வணக்கத் தலங்களும் பாடசாலைகளும் நிறைந்த உரும்பிராய் தெற்கில் பிறந்து வளர்ந்த என்மூத்த அக்காவே, இறந்து போன என் எல்லா உடன் பிறப்புக்களையும் நினைத்து கலங்கிக் கொண்டே இருக்கின்றேன். மானிடராகப் பிறந்தால் என்றோ ஒரு நாளைக்கு இறப்பது நிச்சயம். இதன்புடி சகோதரங்களையும், புதல்வர்களையும், உற்றார் உறவினர்களையும், திக்குத் திக்காகத் தவிக்க விட்டு விட்டு மறைந்து விட்டீர்களே! உங்கள் ஆன்மா சாந்தி அடைய பிரார்த்திக்கின்றோம்.

*அன்புத் தம்பி*

**த. கனகநாயகம்**



எனது ஆசை மச்சாளே,

நீங்கள் கடைசியாக வந்து நின்று கதைத்தது எல்லாவற்றையும் நினைத்து நினைத்து மச்சாள் நான் கலங்குகிறேன்.

இராசையா ஆச்சியும் உங்கள் செய்தி கேட்டு கதறிக் கலங்கி நிற்கின்றார்.

*அன்பு மச்சாள்*

**க. லோகேஸ்வரி**

## எனது நினைவில் திருமதி நவமணி பொன்னுத்துரை

காசினியிற் தங்கிச் சிரஞ்சீவிகளாய் வாழ்ந்தவர் எவருமிலர். பிறப்பும் இறப்பும் உலகறியதி. இதை "உறங்குவது போலும் சாக்காடு உறங்கி விழிப்பது போலும் பிறப்பு" என்று தமிழ்மறை நயமாக உரைக்கிறது. இருந்தும் எம்மிதய வாசலில் சிலரது காலடித் தடங்கள் மட்டும் ஆழமாகப் பதிந்து நிலை பெற்று விடுகின்றன. அவர்களது பூதவுடல் மறைந்தாலும் அவர்தம் நினைவுத் தடங்கள் தொடர்ந்து எம் மனங்களில் நிலைத்து வாழ்கின்றன. சிலமுறைகள் மட்டுமே சந்தித்தாலும் தனது பண்பாலும் சாந்தத்தினாலும் எனது மதிப்பைப் பெற்றவர் திருமதி.நவமணி பொன்னுத்துரை ஆவார். அவரது முழுமையான பண்புகளைப் புரிந்து கொள்ள அவரை நான் சந்தித்த குறுகிய காலம் அவகாசம் அளிக்கவில்லை. ஆயினும் அவரது குடும்பத்தாரினது பண்பாற்றலிலிருந்து அத்தகைய மக்களைப் பெற்ற தாயின் பெருங்குணத்தைப் புரியக்கூடியதாக இருக்கிறது.

"எழுபிறப்பும் தீயவை தீண்டா பழிபிறங்காப்
பண்புடை மக்கட் பெறின்" எனும்

பொய்யாமொழியின் கூற்று திருமதி.நவமணி பொன்னுத்துரைக்கு சாலப்பொருத்தமானது என்பது துணிபு. பிறவிப் பெரும்பிணி தீர்க்கும் திருவருளின் பூரண கடாட்சம் பெற்று அரனின் திருவடிகளை இவரது ஆன்மா அடைந்துய்ய எனது மானசீகமான பிரார்த்தனைகள்.

ஓம் நமசிவாய.

*அன்புடன்*

**யுவி**

**அயலவர்**

## அம்மாவின் காலடியில் எம் கண்ணீர்ப்பூக்கள்

வார்த்தைகள் இல்லை உங்களை வர்ணிக்க அம்மா
சொற்களும் தேவை இல்லை அம்மா
சொன்னாலும் புரியாது எம்நிலை அம்மா
அம்மா என்றால் அதில் எல்லாமே அடங்கும் அம்மா!

**பாசமகன் பாலா**

## நெஞ்சில் நிழலாடும் நினைவுகள்

இனிமை பொறுமை துவளும் மென்மனம்
கனிவும் மிக்கவர் எங்கள் அன்னை
பிறர்நலம் பேணும் நேர்மைத் திறனுடன்
நிறைந்த அன்புத் தந்தை யோடிணைந்து
இல்லறச் சோலையில் மலர்ந்தவர் எண்மர்
நல்லறிவும் ஆற்றலும் பண்பும் மிக்க
புதல்வர் போற்றி வளர்த்தலில் தீவிரம்
இதமாய் சுற்றம் தழுவிய பாசம்
இருபத் தைந்தாம் மணவாழ்வு நிறைவில்
இன்பக் களிப்பில் நல்லூர்க் கந்தன்
சேவடி தொழுது சீருடன் வாழ்ந்தவர்
சேயின் திருமணம் கண்டு களித்தவர்
மூத்த பேரன் முல்லைச் சிரிப்பில்
மூழ்கிய கணவன் மகிழ்வில் பூரித்தார்
கணவன் இழந்த துன்பத்து அவலம்
மனத்துயர் ஆற்றி மக்களைப் பேணல்
தந்தை வழிஉறவில் தம்பியர் அன்பில்
சிந்தை தெளிந்து தேறிய நெஞ்சம்
மகனின் துணையுடன் பின்னவர் திருமணம்
தகவுறச் செய்த நிறைவில் ஆனந்தம்
பேரர் வளர்ச்சியில் கருத்தாய் உழைத்தல்
பேரர் பிறக்காத வேளை தவித்தல்
பேத்தி பிறக்க விநாயகன் தொழுதல்
ஏங்கிச் சொல்ல எத்தனை நினைவுகள்!
காலச் சுழற்சியில் பேரர் திருமணக்
கோலங் கண்டு குதூகலம் கொண்டவர்
பூட்டப் பிள்ளை குறும்பில் இன்பம்
காட்டி மகிழத் திரட்டிய பரிசுகள்



கணவன் ஆசை கருத்தினிற் கொண்டு
கணபதி துணையில் மருத்துவர் ஆக்கிட
பேரர் மனதில் உறுதியை ஊட்டினார்
ஊரும் பார்த்து உறவுடன் களித்தார்
அப்பா நினைவில் ஆண்டுகள் நாற்பதும்
அமாவாசை நாளில் விரதம் இருந்தார்
ஏற்ற பொறுப்புகள் முடித்த அன்னை
ஏங்கிச் சொல்ல எத்தனை நினைவுகள்!
கனடா வந்து காட்சியில் களித்து
கனவுகள் பலித்து மக்கள் நலனே
மனதிற் கொண்டு இறைவனை வேண்டி
இனமும் சூழ வாழ்ந்த வேளை
காலை நேரம் இருளைப் பரவிக்
காலன் அழைக்க சடுதியிற் சென்றார்
திசைகள் தோறும் மக்கள் புலம்ப
இறைபதம் நாடிப் பறந்து சென்றார்.
தாயகம் அனுப்பாச் சுமையுடன்
தாங்கொணா துயரில் தவிக்கிறேன் நானே!

அம்மா உங்கள் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கும்

**பிரிய மகள் ராணி**

## என் அன்பு அம்மாவே!

உரும்பிராயில் பிறந்து வத்தளையில் வாழ்ந்து கனடாவில் இறைவனடி சேர்ந்த என் அன்பு அம்மாவே! செய்தி கேட்டு பிள்ளைகள், சகோதரங்கள், உறவினர்கள் கதறித் துடிக்கிறார்கள் ஒவ்வொரு இடத்திலும். அழுதால்கூடக் கேட்காத தூரத்தில் உங்கள் இறுதிப் பயணம். உங்கள் உயிரற்ற உடலைக் காணும் பாக்கியம் கூடக் கிடைக்கவில்லை எமக்கு. துடிக்கும் எங்களை விட்டுப் பிரிவதில் ஏன் இந்த அவசரமோ? நீங்கள் வருவீர்கள் கதை சொல்லுவீர்கள் என நாம் இங்கு காத்திருக்க உங்கள் கணக்கை முடித்து கருணாகரப் பிள்ளையார் பொற்பாதத்தைத் தேடியே சென்றுவிட்டீர்களே! நீங்கள் எங்களுடன் இருந்த நாட்கள் எம் மனதில் நீங்காத நினைவலையாய்...., அந்த நினைவலைகளுடன் உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்

*உங்கள் அன்பு மகள்*

**இ. ஜெகதீஸ்வரி**

## அம்மா

You were simply "Wonderful" in every sense of the word and had been a tremendous "Strength" to every one of us. It is very sad that you are no longer with us, but we all know that you had gone from this world only to be with "Appa". We will "Remember and Cherish" you and the days and years we lived together in our own ways. Just to mention one, when we met or talked over the phone you would always say, "How are you all? Are the children studying well? Give them my regards", and conclude by saying, "எங்கிருந்தாலும் எல்லோரும் நல்லாய் இருங்கள்."

"May your Soul rest in Peace"

**அன்பு மகன் யோகு**

## அன்னையாய் தந்தையாய்

தனிமரமாய் ஆண்டுகள் பல
எமைத் தாங்கி நின்றனையே!
இன்று தாங்கியது போதுமென்று
தலை சாய்த்து விட்டனையே!
அம்மா உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*அன்பு மகள்*
**பத்தா**

## அன்னையே

அவனியில் அவையோர் போற்றிட ஏற்றம்மிக்க வாழ்வு தந்தீர்கள். காலமெல்லாம் எமக்காய் கணக்கில்லா தியாகம் புரிந்திட்டீர். தங்கள் வருகைக்காக கனிவுடன் நான் காத்திருக்க கண்ணிமைக்கும் பொழுதினிலே காலனவன் அழைப்பை ஏற்று கடிதென கரைந்திட்டீர்கள் எமது இறுதிக்கடன் இன்றியே. பதிதனை இழந்திட்ட போதும் பற்றுறுதியுடன் பக்குவமாய் எண்மரையும் கண்ணிமை போல் காத்தீர்கள். பெற்ற நின் பிள்ளைகளின் கடமைகள் முடிந்ததென்று புன்முறுவல் பூத்த இன்முகத்துடன் முடித்தீர் வாழ்வதனை. பாவி நான் பரிதவிக்கின்றேன் நின்கழல் காண பல முறை பணிகின்றேன் சாந்திக்காக.

*மகள்*

**ஜெயலட்சுமி தளையசிங்கம்**



## கண்ணீர்த்துளிகள்...

ஓராண்டு திட்டம் போட்டு
ஓராயிரம் ஆசைகளுடன் கனடா வந்ததென்ன அம்மா!
ஓயாது அன்புமழை பொழிந்து எம்மனதில்
ஓங்கி உயர்ந்து நின்றதென்ன அம்மா!

ஓடியாடி உழைத்து வந்து நாள்தோறும் இரவில் உங்கள் கால்
ஓரத்திலிருந்து பத்துநிமிடமேனும் கதைத்து மகிழ்ந்ததென்ன
ஓரிரவில் மீண்டும் அப் பாக்கியம் கிட்டுமா அம்மா?
ஓடமது நடுக்கடலில் தத்தளிக்கும் நிலை எனது அம்மா!

ஓர் விடியலில் நாம் எதிர்பாராமல் திகைத்து நிற்க
ஓசை இல்லாது எம்மைத் தவிக்கவிட்டு ஓய்ந்த தென்ன
ஓடாமல் ஒன்றும் செய்ய இயலாமல்
ஓராயிரம் கண்ணீர் துளிகளுடன் கதறுகிறேன் அம்மா!

**ஆசை மகன் சிவா**

## செல்லமகன் ஏக்கம்

கொள்ளை ஆசைவைத்து வளர்த்தீர்களே அம்மா
கடைசி மகன் செல்லம் அம்மாவுக்கு
கொள்ளி போட வேண்டும் இறுதிக்காலத்திலென
சொல்லிச் சொல்லி வளர்த்தீர்களே அம்மா!
கொடுத்து வைக்கவில்லையே அம்மா எனக்கு
கொள்ளை எடுத்துப் போனானே இந்தக்காலன்!

**செல்ல மகன் சேந்தன்**

## உற்றார் உருகல்

நாற்பது வருடம் கொண்டவர் துணையில்லாது
நான்கி ரண்டு பிள்ளைகளை வளர்த்து
நானிலம் போற்ற நற்பதவிக்குக் கொண்டு வந்து
நாவினிக்கப் பேசிநல் லாட்சிசெய்த மகராசியே!
மூவாறு பேரப்பிள்ளைகள் மூவிரண்டு பூட்டப்பிள்ளைகளென
மூச்சுக்கு முந்நூறு தடவைகள் எண்ணி மகிழ்ந்ததென்ன!
மூத்தவர் இளையவர் உன்வரவை ஆவலுடன் எதிர்பார்க்க
மூச்சடைப்பில் காலன் உனைக் கொண்டு சென்றதென்ன!

**உற்றார்**

## மருமக்கள் இரங்கல்

திருமதி.நவமணி பொன்னுத்துரை அவர்களின் மகளை திருமணம் செய்த நாள் தொடக்கம் இன்று வரையும் ஒரு நாளாவது ஒருவரையும் அவர் குறை கூறியதை நான் கேட்டதில்லை. இவரின் இளகிய பொறுமையான சுபாவம் என்னை மிகவும் கவர்ந்திருந்தது. எங்கள் குடும்பம் கொழும்பில் வாழ்ந்த பொழுது, வேண்டிய பொழுதெல்லாம் யாழ்தேவியில் உடன் புறப்பட்டு வந்து அவர் செய்த உதவிகளை என்னால் ஒரு நாளும் மறக்கமுடியாது. எங்கள் பிள்ளைகளை கண்ணுங்கருத்துமாய் வளர்த்தவர் அவர். எல்லோருக்கும் உடன் உதவிகள் செய்து மகிழ்பவர் அவர். 1958ல் இனக்கலவரத்தால் கொழும்பில் இருந்து கப்பலில் தாயகம் வந்து சேர்ந்த கதையை அடிக்கடி கூறுவார். பிரச்சனைகள் தீரவேண்டுமென இறைவனை வேண்டுவார்.

எங்களைப் பார்க்க ஆசையுடன் கனடா வந்தவரின் எதிர்பாராத மரணம் என்னை மீளாத்துயரில் ஆழத்துகின்றது.

இவரின் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றேன்.

*அன்பு மருமகன்*
**சி.தெய்வேந்திரன்**

## Mami...

I can't even imagine that you are gone. I still think you are with us, sitting on the living room sofa watching Annamalai.

Every morning at 10:30, you'd ask me to put on the T.V, so that you could watch Annamalai. Now it is so silent here at our house because you are not here.

I never thought you would leave us so soon. I will never forget my memories with you... Mami where are you...

"May your soul rest in Peace"

*Your Loving Daughter - in - law*
**Chuty**



## அன்பின் மாமி

தஞ்சமென வந்தவர்க்கு உதவி
தரணி போற்ற வாழ்ந்த என்மாமியே,
அஞ்சா நெஞ்சுடன் அனைவரையும்
சமமாக அணைத்து மகிழ்ந்திட்டீரே!
அன்பினை வைத்து பாசமெனும் வலையில்
எம்மைச் சுற்றி வாழ்ந்தீரே!
எம்மை விட்டுப் பிரிந்தது ஏனோ?

*அன்பு மருமகள்*
**ரதி**

## In My Memories of Mami

Navamani mami as she was to me was a quiet, reserved person. The memories that I have are those from the good old days, more than 35 years ago, when I used to go to Urumpirai during the school holidays. Most of our days were spent on their old house with those long L-shaped verandahs and in the large "valavu" with the mango trees, the jak fruit trees, and then the chicken and the goats roaming around in the sheds. While we played, Navamani mami would be seated against those tall pillars quietly and perhaps thinking about the future of her children. Having lost her husband at an early age in her life she shouldered the responsibility and came out at the very top. Those early connections are the roots to our relationship to our motherland still!

Living overseas, we hardly get time to do anything. Even when we get time to go "home" we just can't find time to do all that we used to do or to expose our younger generation. However, in 2003, I was very fortunate to have Navamani mami graciously attend my son's birthday party in Colombo. This is a great memory that I cherish. She came to Canada to be with her children for a short time but God just wanted her to come to him to take her tohis "home". She is dearly missed by all of us especially my father, who always lent his shoulders to her in times of need, and to whom she was the affectionate "Periyakka". May her soul rest in peace.

*Loving nephew in Minnesota*
**Vasanthan Rajanayagam**

## எங்கள் அன்பான நவமணி மாமி

எங்கள் அன்புக்குரிய நவமணிமாமி இயற்கை எய்திவிட்டார் என்ற செய்தி கேட்டு இடிந்து போனோம். பிறப்பவர் இறப்பது இயற்கையாயினும் எமது அன்புக்குரியவரை இழக்கும் போது உள்ளம் ஏற்க மறுக்கிறது. அதுவும் குறிப்பாக எங்களுடைய அப்பாவின் மூத்த சகோதரி. அந்த அன்பான உயிரின் பிரிவு எங்களுக்கோர் பேரிழப்பு.

நவமணிமாமி என்னும்போது நினைவிற்கு வருவது உரும்பிராயில் அவரது மா, பலா மரங்கள் நிறைந்த பெரிய வீடும். வீட்டிற்கு முன்பு மைதானம் போல் அமைந்துள்ள பெரிய காணியும் தான். நாங்கள் தலைமன்னார், நாவலப்பிட்டியிலிருந்து பாடசாலை விடுமுறைக்கு உரும்பிராய் செல்லும்போது பகல் நேரம் முழுவதையும் செலவழிப்பது மாமியின் வீட்டில் தான். ஒரே விளையாட்டும் கும்மாளமும் தான். எவ்வளவு குழப்படி செய்தாலும் ஒரு நாளும் எங்களை கண்டித்ததில்லை. அது இன்னும் எங்கள் நினைவில் நிற்கிறது. மாமியின் கையால் உண்ட மாம்பழமும் பலாப்பழமும் இன்னும் நாவில் இனிக்கிறது.

நவமணி மாமி அமைதியான சுபாவம் கொண்டவர். அதிகம் பேசமாட்டார். இங்கு (கனடா) வந்திருந்த போது நல்ல சந்தோசமாக பழகி சிரித்து மகிழ்ந்தார். எங்களுடைய பிள்ளைகள். கணவன்மார் யாரெனக் கேட்டு அவர்களுடன் அன்பாக கதைத்தார். அவருடைய சந்தோசம் காலனுக்கு பொறுக்கவில்லை போலும். அவரின் உயிரை பறித்துவிட்டார். அவர் எம்மை விட்டு பிரிந்தாலும் அவருடைய நினைவுகள் என்றும் எம் உள்ளத்தில் பசுமையாய் பதிந்திருக்கும். நவமணி மாமியின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல கருணாகரப்பிள்ளையாரை வேண்டுவோமாக.

**குணம்மாமாவின்**
**பிள்ளைகள்**



## எங்கள் பாட்டி

எங்கள் பாட்டி இறைபதம் எய்திய செய்தி அறிந்து நாம் சொல்லொனாத் துயரில் ஆழ்ந்தோம். சில மாதங்களுக்கு முன்னர் அவர் பல சிரமங்களுக்கு மத்தியிலும் ஆவலாக எங்கள் வீட்டிற்கு வந்தபோது நாங்கள் உரையாடி மகிழ்ந்தோம். அவர் மிகவும் பொறுமையான குணமும், இனிமையான சுபாவமும் கொண்டவர்.

ஆலமரம் போல அனைவருக்கும் நிழல் தந்த பாட்டி அவர்கள் இன்று எம்மத்தியில் இல்லை என்பது ஆழ்ந்த துயரத்தைத் தந்த போதிலும், அவரது இனிமையான நினைவுகள் எம்மனதில் என்றென்றும் ஆணிவேராக நிலைத்திருக்கும் என்பது திண்ணம். பாட்டியின் ஆத்ம சாந்திக்காக இறைவனை வேண்டி நிற்கும்.

**கிருஷ்ணமூர்த்தி குடும்பத்தினர்**

## பெரியம்மா

நவமணி பெரியம்மாவை நினைக்கும் பொழுதெல்லாம் உரும்பிராய் வீடும் வளவும்தான் எனது நினைவிற்கு வருகின்றது. உரும்பிராயில் தனது வீட்டிலிருந்து எங்கள் வீட்டிற்கு நடந்து வந்து என்னுடைய அம்மாவுடன் அளவளாவி மகிழ்வார்.
நாங்கள் நவமணி பெரியம்மா வீட்டுக்கு முன்னாலுள்ள பெரிய வளவில் கிளித்தட்டு, கிரிக்கட் என்று விளையாடிக் களிப்போம். அந்த நேரங்களில் அங்கு வந்து பார்த்துக் கொண்டிருக்கும் பெரியம்மா, கிளித்தட்டு விளையாடும்பொழுது ஏதாவது பொய் சொல்லி ஏமாற்றினால் உடன் கவனித்து ஏமாற்றி விளையாடக் கூடாது என்று கூறுவார்.
பெரியம்மா கனடா வந்த செய்தி அறிந்தவுடன் எனது சின்னமகனையும் அழைத்துக்கொண்டு போய் கதைத்து மகிழ்ந்தோம். அப்பொழுது எனது சின்ன மகனை தன் பக்கத்தில் இருத்தி வைத்துப் பேசி இன்புற்றார். அந்த நல்ல நினைவுகளைச் சுமந்த வண்ணம் அவரின் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கிறோம்.

*அன்பு பெறாமகன்*
**இளங்கோ**
*(தம்பிஐயா குடும்பம்)*

# Our Dearest Seeniyamma

Seeniyamma was a very special and important person in all our lives. She was gentle, kind and caring. She was soft spoken and well liked by everyone . We are saddened and shocked by her untimely death, but we were all lucky to meet her again before she passed away.

It takes a long time to get used to the loss of someone we love, but it is important to remember that when people pass away they leave something special behind. They leave us memories of many things they did and said to be treasured. As long as we live we have those memories, the people we love will live in our hearts forever!

Because of her good heart the holy one took her to His Divine Kingdom without suffering pain. We will all miss her! May her soul rest in peace

**Sutha**
(Rajaratnam Family)

**யோகர் சுவாமியின் அருளுரைகள்**

- ஒவ்வொரு மனிதனும் ஒவ்வொரு தெய்வம்
- சும்மா இருக்கப் பழக வேண்டும்
- கூஷகூஷநான்// செத்தால் நீ நல்லாய் இருப்பாய்
- பூவாகிப் பிஞ்சாகி பின் முற்றிப் பழுக்கிறது போல், அனுபவஞானமும் படிப்படியாக வரட்டும்.
- உங்களுடைய வேலைகளைச் செவ்வனே செய்யுங்கள் அதே யோகம்.



## எங்கள் அருமை அம்மம்மா

ஆலமரம் போல் விரிந்த எங்கள் குடும்பம் அதில்
ஆணிவேர் அம்மம்மாவை இழந்து தடுமாறித் தத்தளிக்கின்றோம்.
கூஷஆவதும் பெண்ணாலே/ என பிள்ளைகள், பேரப்பிள்ளைகளை
ஆளாக்கி பூட்டப்பிள்ளைகளையும் கொஞ்சி மகிழ்ந்தீர்களே!

ஆயிரமாயிரம் பிரச்சனைகள் தலைதூக்கிடினும்
ஆடாமல் அசையாமல் துணிவுடன் நின்றீர்களே!
ஆத்திரப்பட்டு பேசாமல் அமைதியைக் கடைப்பிடித்து
ஆரஅமர யோசித்து குடும்பத்தை நல்வழி நடத்தினீர்களே!

ஆடி ஓய்ந்து களைத்து வந்த பிள்ளைகளிடம் நாலுவார்த்தை
ஆறுதலாகப் பேசி புத்துணர்வு ஊட்டினீர்களே!
ஆரத்திசுற்றி வந்த அத்தனை மருமக்களையும்
ஆனந்தமாய் உங்கள் பக்கம் கவர்ந்து கொண்டீர்களே!

ஆரும் பேரப்பிள்ளைகளிடம் கோபமாய் பேசினால் தலையிட்டு
ஆசுவாசப் படுத்தி சமாதானம் செய்தீர்களே!
ஆதரவு கேட்டவர்களுக்கு அள்ளி வழங்கி
ஆவன செய்து மகிழ்ந்து இருந்தீர்களே!

ஆரம்ப நாட்களில் எங்களைப்பொறுப்பாகப் பராமரித்து
ஆதரவளித்து அம்மாவைப் பாடசாலைக்கு அனுப்பினீர்களே!
ஆறாது உணவளித்து போசித்து எமக்கு
ஆகாததைத் திணிக்காது தவிர்த்தீர்களே!

ஆரம்பப் பள்ளிக்கு எம்மைத் தயார்படுத்திக் கை
ஆட்டி அனுப்பி வைத்து சந்தோஷித்தீர்களே!
ஆத்திசூடி தேவாரங்கள் சொல்லித் தந்து
ஆசாரமாய் நல்லொழுக்கத்தையும் கற்றுத் தந்தீர்களே!

ஆகாயமளவு கொள்ளைப்பிரியம் பேரப்பிள்ளைகள் மீது
ஆனந்தமாய் ஓய்வூதியநாளன்று தின்பண்டங்கள் தந்தீர்களே!
ஆர்ப்பாட்டம் பண்ணும் எம்மை புன்னகையுடன் கவனித்து
ஆராய்ந்து தனியே அழைத்து இது நல்லதில்லை என்பீர்களே!

ஆண்டுகள் தோறும் பிறந்ததினத்தில் பேரர்,பூட்டப்பிள்ளைகளுக்கு
ஆசியும் பெரிய பச்சை நோட்டையும் வாரி வழங்குவீர்களே!
ஆண்டுக்கடைசியில் கூடஎன் பிறந்தநாளுக்கு இன்று ஏது
ஆவது தரவேண்டும் என்று தந்து மகிழ்ந்தீர்களே!

ஆறரையாகிறது தொலைக்காட்சியைப் போட்டுவிடு
கூஷ்ஆனந்தம்/ பார்க்கப்போகின்றேன் என்று கேட்பீர்களே!
ஆரது படத்தில் நடிக்கிறதென பேரப்பிள்ளைகளுடன் ஒருவராக
ஆசையாசையாய் திரைப்படங்கள் நாடகங்களை இரசித்தீர்களே!

ஆடை ஆபரணங்கள் தனக்கென்று ஒருநாளும் வாங்காது
ஆட்கள் பரிசளிப்பதை சொல்லிக்காட்டி களிப்புற்றீர்களே!
ஆசைப்பட்டு எல்லா சிறுபரிசுப் பொருட்களையும் பாதுகாத்து
ஆவலாய் இலங்கையில் போய் காட்டப்போகிறேன் என்றீர்களே!

ஆகாய விமானம் ஏறி பயமின்றி கனடா வந்து
ஆவலுடன் பிள்ளைகள்பேரர்களுடன் இடங்கள் சுற்றி இரசித்தீர்களே
ஆனால் கலங்கிக் கதறித் துடிக்க நாம் இறைவனடி சேர்ந்து
ஆழ்த்தி விட்டீர்களே எம்மை மீளாத் துயரில்!!!

ஆசையாய் அப்புச்சி என்றே அழைத்தவர் காத்திருக்க
ஆவலுடன் அம்மம்மா வரவை ஏங்கி எதிர்பார்த்து நிற்க
ஆரத்தழுவாமல் அன்பு முகம் காட்டாமல்
ஆவி சோர்ந்ததென்ன? நாங்கள் தேம்பியழச் சென்றதென்ன?

ஆதி அந்தமில்லா அருட்பெருஞ்சோதியில் கலந்து அம்மம்மா,
உங்கள் ஆன்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் அன்புச் செல்லப் பேரப்பிள்ளைகள்
**கருணா, சுதன், வசு, பரன், தீபன்,**
**ஜெயன், சுகந்தன், அஜந்தன்.**



# காற்றினில் ஓர் இரங்கல் மடல்

காலனின் கொடுமையால் கண்ணதனை இழந்துவிட்டு
கதறுகின்றோம் நாம் இங்கு
சொல்லி ஆறிடத்தான் சொந்தங்கள் போதவில்லை ஆதலால்
கல்வெட்டில் எழுதுகின்றேன் கவியாக்கி என் மடலை
காற்று சேர்த்துவிடும் கட்டாயம் உவ்விடத்தில்
கலக்கம் தீர்ப்பவர் தான் எவ்விடத்தில்?

சாதனைகள் பல கண்டு சத்தியமே உங்களுக்கு
சமர்ப்பிக்க என்றிருந்தேன் ஆனால்
வேதனையைத் தந்திட்டு வேண்டியர் பலர் தவிக்க
சடுதியாய் சென்றிட்ட சங்கதியின் மர்மம் என்ன?

எண்மரை பெற்று ஏற்றத்தில் வைத்து
கடைசி நிமிடம் வரை கண்குளிர பார்த்திட்ட
களிப்பு போதும் என்று கருதிவிட்டதாலா? இல்லை

கொஞ்சமும் குறைவின்றி கொழும்பிலும் உங்களை
கண்ணாக பார்த்திட்ட கடமையைக் கண்டு
களிப்புற்றது போதுமென்று கருதிவிட்டதாலா? இல்லை

கண்டி கொழும்பல்ல கனடாவும் காட்டி
உண்மை அன்பதனை உங்களுக்கு உணர்த்திய
உங்கள் அருமைப் பிள்ளைகளின் குணம் கண்ட குதூகலமா?

எண்ணிப்பார்க்கிறேன் ஏங்கித் தவிக்கிறேன்
உண்மையைக் கூறுகின்றேன் ஊரேகூடி நின்று
உங்களுக்காய் உருகிய போது உண்மையை
நான் உணர்ந்தேன் உங்கள் உயர்ந்த உள்ளமதை

விதியின் விளையாட்டில் விலகிவிட - நாம் யார்?
காலத்தின் ஓட்டத்தில் கட்டாயம் நாம் வருவோம் அங்கு
அந்நேரம்
அள்ளி அணைத்திடுங்கள் ஆசை தீரும்

அதுவரை
கண்ணீருடன்
பேரன்
**பிரசன்னன்**

## மனதை விட்டகலா அம்மம்மா

அம்மம்மா எம்மை விட்டுப் பிரிந்து இறைவனடி சேர்ந்தாலும் எம் எல்லோர் மனங்களிலும் அழியா இடத்தைப் பெற்று இருக்கின்றார். சிறுவயதில் அம்மம்மா எமக்கு ஆசிரியராக, எம்மைக் கண்டிக்கும் பெற்றோரிடமிருந்து காக்கும் ஒரு காவலனாக, பாடசாலை விடுமுறை நாட்களில் எம்மைப் பல இடங்களுக்கும் அழைத்துச் செல்பவராக, ஓய்வூதியம் பெறும் தினத்தை எதிர்பார்க்க வைப்பவராக, எமது பிறந்த தினத்தை மகிழ்ச்சியூட்டுபவராக என பல வழிகளிலும் எங்கள் மனங்களில் நீங்கா இடம் பிடித்துள்ளார்.

அம்மம்மா தனது ஆசைப்படி தானும் கஷ்டப்படாமல் பிறரையும் கஷ்டப்படுத்தாமல் இறைவனடி சேர்ந்து விட்டார். இவரது மறைவு எம்மை "இதைப் பார்க்கும் வரை இருந்திருக்கலாம், இதைச் செய்யும் வரை இருந்திருக்கலாம்" என்று ஏங்க வைக்கின்றது. அம்மம்மாவின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்

*அன்பு பேத்திகள்*
**கிருத்திகா, செந்திரு, ஜெகந்தினி**

## Appuchi

We wish we could have had more time to have gotten to know you better.
We will miss you greatly and love you always.

*Loving Grandsons*
**Piraveen and Nirupan**

## Grandmother

I miss you very much. However I know you are happy here you are (in the hands of god) without any worries... but I want you to know that I love you so much. I pray that your Soul will rest in peace.
You will always be in our hearts and we will always treasure you! I also want to thank you for being the best grandmother ever alive.

*your loving Granddaughter*
**Thamaraa Sivayogan.**



## My Appamma

I love you very much. When I came to Sri Lanka I didn't feel the grandma, grandchild relationship between us. As soon as you came to Canada, I was so happy to see you again. When I saw you smiling it made me feel so good because your smile made everyone's heart fill with joy. When you stayed with us I realized how much you meant to me and how much of an impact you had on my life. I had fun watching Tamil movies and dramas with you. Listening to you relate your life to the movie. When you talk about how you are going to take everything and show it to the people in Sri Lanka, I felt happy to know
that you are happy spending time with us. I never thought you would leave me so soon. I cherish your good memories that you left with us.
You will always be in my heart, and I pray that your soul will rest in peace.

*Your Loving Granddaughter,*
**Yokesha.s**

### அப்பம்மா

ஒளிதீபமே அணையா விளக்கே
மறைந்தும் மறையாத எம்சுடரே
எங்கள் அப்பம்மா!
எம்மை விட்டு ஏன் போனீர்?
எழில்மிகு உரும்பிராயில் உதித்த
எங்கள் அப்பம்மா!
மேலோகம் ஏன் சென்றீர்
கனடாவில்?
எட்டுப் பிள்ளைகளைப் பெற்று
எளிதாக வாழ்ந்த எங்கள்
அப்பம்மா பேரப் பிள்ளைகள்
என்றால் கொள்ளை ஆசை
எம்மைக் கண்டால் கட்டி அணைத்து
பட்சணங்கள் தருவீரே
எங்கு சென்றீர்கள்? உங்களைக்
காணாது நாம் கலங்குகின்றோம்

அன்பு பேரன்கள்
**ராகேஷன், தர்ஷாந்தன்.**

## பூட்டப்பிள்ளைகளின் அஞ்சலி

கண்முன் வீற்றிந்தவரே
கண்ணிமைக்குமுன் உறங்கிவிட்டீரே!
கண்ணாக எம்மைக் காத்தவரே
கண்ணீரை எமதாக்கிப் பிரிந்தீரே!

என் பூட்டப்பிள்ளைகளை பிரிந்து
எங்கே போகப் போகிறேன்
வருவேன் விரைவில் என்றீரே
வராமல் சென்று விட்டீரே!

உங்கள் ஆத்மா சாந்தியடைய
பூட்டப் பிள்ளைகள் நாங்கள்
கருணாகரப் பிள்ளையார் அருள் வேண்டி
கண்ணீர்ப் பூக்களைச் சொரிகின்றோம்

*ஆசை பூட்டப்பிள்ளைகள்*
**திவ்யா, தனு, நிருஷன்,**
**கோபி, தணிகா, சமிதன்**

## திருக்குறள்

நில்லா தவற்றை நிலையின என்றுணரும்
புல்லறிவு ஆண்மை கடை

நாச்செற்று விக்குள்மேல் வாராமுன் நல்வினை
மேற்சென்று செய்யப் படும்


நெருநல் உளன்ஒருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்திவ் வுலகு

ஒருபொழுதும் வாழ்வது அறியார் கருதுப
கோடியும் அல்ல பல

குடம்பை தனித்தொழியப் புட்பறந் தற்றே
உடம்போடு உயிரிடை நட்பு

உறங்குவது போலும் சாக்காடு உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு






## நன்றிக்குரியவர்களை நினைவு கூர்கிறோம்

கொழும்பில் எங்கள் அம்மாவின் உடல்நலனில் அக்கறை கொண்டு வேண்டிய உதவிகளை எல்லாம் உடனுக்குடன் செய்து உதவிய திரு. ரங்கநாதன் அவர்களுக்கு எமது இதயங்கனிந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறோம்.

## திருமதி நவமணி பொன்னுத்துரை அவர்கள்

சிவபதம் அடைந்த செய்தி கேட்டு எம் இல்லங்களுக்கு உடன் வந்து அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், தொலைபேசி மூலம் ஆறுதல் வார்த்தைகள் கூறி எம் சோகத்தை பகிர்ந்து கொண்டவர்களுக்கும், அவரின் இறுதிநாள் முதல் கிரியைகள் வரை அளப்பரும் உதவிகள் ஆற்றிய உற்றார் உறவினர் நண்பர்களுக்கும், தொடர்புசாதன ஊடகங்களுக்கும், மலர் வளையங்கள் அனுப்பி அஞ்சலி செலுத்தியோர்களுக்கும், அவரின் இறுதிக்கிரியைகள், அந்தியேட்டி முதலியவற்றில் கலந்து பலவற்றாலும் உதவி அவரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்தனை செய்தவர்களுக்கும், இம் மலரை சிறப்புற அமைத்துத் தந்தவர்களுக்கும் எம் இதய பூர்வமான நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறோம்.

**இங்ஙனம்**
**மக்கள், மருமக்கள்**
**பேரப்பிள்ளைகள்,**
**பூட்டப்பிள்ளைகள்**



# கீதாசாரம்

எது நடந்ததோ,
அது நன்றாகவே நடந்தது
எது நடக்கிறதோ,
அது நன்றாகவே நடக்கிறது
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்
உன்னுடையது எதை இழந்தாய்,
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்?
அதை நீ இழப்பதற்கு
எதை நீ படைத்திருந்தாய்,
அது வீணாவதற்கு
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது
எதை கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை மற்றொருவருடையது
மற்றொருநாள்,
அது வேறொருவருடையதாகும்.
இந்த மாற்றம் உலக நியதியாகும்.

PRINTED BY UNIE ARTS (PVT) LTD., COLOMBO 13. TEL: 2330195.